நாள் - 18.03.2026

**C.C. No**. 42/2023

**PW** 4-சிவா, த/பெ.நடேசன்.

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 18th **day of March** 2026.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1.நான் போலீசார் விசாரணையின் பொழுது சொன்ன விபரத்தை தான் முதல் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரர் சாரதா பீரித்தா மற்றும் அவரது கணவரை எனக்கு வழக்கு சம்பவத்திற்கு முன்பே தெரியும் இவ்வழக்கு சம்பந்தமாக என்னை காவல் நிலையத்தில் வைத்து தான் போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பொழுது நான் எனது வீட்டின் உள்ளே இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலம் கொரோனா கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த காலம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு முன்பாக கல்லூரியில் பொருத்தப்பட்டிருந்த கேமராக்கள் இருந்தது என்றால் சரிதான். போலீசார் விசாரணையின் பொழுது நான் மற்றும் ஆறுமுகம் இருவரும் வாக்கிங் சென்று கொண்டிருந்தேன் என சொல்லி இருந்தால் தவறு என்றால் சரிதான். பொதுவாக செயின் அறுத்தால் இரண்டாக அறுந்து விடும் என்றால் சரிதான். நான் பார்த்த போது செயின் பிரிந்திருந்தது எவ்வாறு பிரிந்தது என எனக்கு தெரியாது. மேற்படி செயின் என்ன வகையான செயின் என்றால் தாலி செயின்.

2.பொதுமக்கள் அதிகளவில் கூடி விட்டார்கள் என்றால் சரிதான். நாங்கள் துரத்திச் சென்று பிடித்த பொழுது பின்னர் ஆறுமுகம் மற்றும் பொதுமக்களும் வந்தார்கள். சம்பவம் சம்பந்தமாக சாரத ப்ரீத்தா அவர்கள் கணவருக்கு நான் தான் தகவல் சொன்னேன் என்றால் சரியல்ல செயின் எதிரியிடமிருந்து பிடித்து எதிரியையும் செயினையும் நேரடியாக வீட்டிற்கு கொண்டு வந்தோம். பின்னர் காவல் நிலையத்துக்கும் தகவல் சொன்னோம். எதிரியை பிடித்ததாக சொல்லப்படும் நேரத்தில் யார் யார் என்னுடன் இருந்தார்கள் என்றால் கிராம்திக் குமார் மற்றும் இரண்டு நபர்களும் இருந்தார்கள் அவர்கள் பெயர் தெரியாது ஒரே பகுதியை சார்ந்தவர்கள். என்னை போலீசார் விசாரித்த பொழுது எதிரி என்ன கலர் உடை அணிந்து இருந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் கருப்பு நிற T Shirt அணிந்திருந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் அறுபடாமல் உள்ளது என்றால் தெரியவில்லை அறுபட்டு உள்ளது. போலீசார் விசாரணையில் எந்த பகுதியில் செயின் அறுபட்டிருந்தது என குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் சொல்லித்தான் எதிரிதான் செயின் பறித்துச் சென்றார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியவில்லை. நான் தான் எதிரியை துரத்திச் சென்று படித்தேன். புகார்தாரர் சத்தம் போட நான் உடனே சென்று துரத்திப் பிடித்தேன் புகார்தாரர் தான் எதிரி என்னிடம் எதிரி செயின் பறித்துக்கொண்டு ஓடுவதாக என்னிடம் தெரிவித்தார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் புகார்தாரர் மற்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Signature of Witness**

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.18 17:40:45 +0530